வலசையூர் ஊராட்சி, அயோத்தியாப்பட்டிணம் ஒன்றியம், ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : K.செல்வஅரசி

ந.க.எண். 774/2024/ தி3 நாள் :29.02.2024

பொருள் : வீட்டு மனைப்பிரிவு – வரைபட அனுமதி – வலசையூர் ஊராட்சி ஒன்றியம் – அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி வலசையூர் கிராமம் சர்வே எண்–113/4A2, 113/4A1B, 113/4B1, 113/4B2, அமைந்துள்ள 1.653 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள 1 முதல் 27 வரை உள்ள மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கி ஒப்புதல் அளித்தல் தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித ந.க.எண். SLM/C41S2J01/18965/2023/2024 TCP.தேதி:20.02.2024.
2. அயோத்தியாப்பட்டிணம் சார்பதிவாளர் அலுவலகம் படிவம் A நன்கொடை மூலமாக மற்றும் செய்தற்காக பத்திர எண்கள். Doc.No.5837/2023 & 5839/2023. நாள்.20.09.2023.
3. வலசையூர் ஊராட்சி மன்ற தீர்மான எண். 10/2024 நாள். 29.02.2024.
4. சார்நிலை கருவூலத்தில் செலுத்திய E-Chalan No.20240229026903. date : 29.02.2024. நில பயன் மற்றும் கட்டணம் கூற்தாய்வு கட்டணம்.

<u>உத்திரவு :–</u>

சேலம் மாவட்டம், வலசையூர் ஊராட்சி அயோத்தியாப்பட்டிணம் ஒன்றியம், வலசையூர் கிராமம், சர்வே எண்–113/4A2, 113/4A1B, 113/4B1, 113/4B2, அமைந்துள்ள 1.653 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள திரு.மணி மற்றும் 7 நபர்கள் மனைபிரிவுகள் செய்துள்ளதற்கு பார்வை 1–ல் கண்டுள்ள நகர ஊரமைப்பு அமைப்பு உதவி இயக்குநர், சேலம் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண். SLM/C41S2J01/18965/2023/2024TCP, தேதி.20.02.2024–படி குடியிருப்பு மனைபிரிவுகளுக்கு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கங்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் நில உரிமையாளர் மனை பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவைகளை வலசையூர் ஊராட்சி பராமரிப்பிற்காக அயோத்தியாப்பட்டணம் சார் பதிவாளர் பத்திர பதிவு எண். Doc.No.5837/2023 & 5839/2023. நாள்.20.09.2023 மூலம் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் தார்சாலைகள், தெரு விளக்குகள், இருபுறங்களிலும் கழிவு நீர் வாய்க்கால் தரமாக அமைக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–ல் காணும் நிலத்தின் வழிகாட்டு மதிப்பின்படி 3% தொகையினை சார்நிலை கருவூலத்தில் E-Chalan No.20240229026903 Date: 29.02.2024–ன்படி செலுத்தியுள்ளார். மற்றும் நில பயன் மற்ற கட்டணம் கூற்தாய்வு கட்டணம் செலுத்தியுள்ளார்.

K. Selvarasi

தலைவர்
ஊராட்சி மன்றம்,
வலசையூர் ஊராட்சி

சேலம் மாவட்டம் நகர ஊராமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நகல் எண். SLM/C41S2J01/18965/2023/2024TCP–ன்படி அப்ரூவல் SWP/DTCP/SALEM LAYOUT No.45/2024 நாள்.20.02.2024 படி தொழில் நுட்ப அனுமதி மற்றும் வரைபட அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட சர்வே எண்கள் 1 முதல் 28 வரை உள்ள மனை பிரிவுகளுக்கு வலசையூர் ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் அங்கீகாரம் அளித்துள்ளதால் 1.திரு.மணி, 2.சுப்ரமணி, 3.A.பாஸ்கர், 4.M.செந்தில்குமார், 5.மாரியம்மாள், 6.ரமேஷ், 7.K. பெருமாள், 8.P.இருசாயி, கதவு எண்.147C, பெரியார் காலனி, தாதகாப்பட்டி, சேலம் டவுன், சேலம் தாலுக்கா, சேலம் மாவட்டம், என்பவர்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டுள்ளவாறு மனை பிரிவுகளை கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவு இடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. சேலம் நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். SLM/C41S2J01/18965/2023/2024TCP–ன்படி அப்ரூவல் SWP/DTCP/SALEM LAYOUT No.45/2024 நாள்.20.02.2024 என வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்படவேண்டும்.
2. ஊராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகளின் நிலங்களை வருவாய்த்துறை நில ஆவணங்களில் உட்பிரிவு செய்து தரவேண்டும். அதற்குண்டான கட்டணங்களை தாங்கள் செலுத்த வேண்டும்.
3. பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதத்தில் தெரிவித்த நிபந்தனைகள் மற்றும் மேற்கண்ட நிபந்தனைகளும் ஏற்றுக் கொண்டு பொதுவாக மனைபிரிவு சம்மந்தமான எந்த விதிகளையும் நிபந்தனைகளும் மீறக்கூடாது.
4. மனை பிரிவில் ஒதுக்கப்பட்ட மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல உட்பிரிவு செய்து மனை நிலமாக விற்பனை செய்ய வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தை மாற்றமும் / விடுதலின்றி மனை பிரிவு நுழைவாயில் 6 அடி X 4 என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக தெரிவிக்கப்படவேண்டும்.

இணைப்பு : வரைபடம்

பெறுதல்

மணி மற்றும் 7 நபர்கள்.
147C, பெரியார் காலனி,
தாதகாப்பட்டி,
சேலம் டவுன்,
சேலம் மாவட்டம்.

தலைவர்
ஊராட்சி மன்றம்,
வலசையூர் ஊராட்சி.

நகல்:
1. உயர்திரு. சார்பதிவாளர்,அயோத்தியாப்பட்டிணம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. துணை இயக்குநர் நகர், ஊரமைப்பு துறை, சேலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. வட்டாட்சியர், சேலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.